## வண்ணாரப்பேட்டை - விம்கோ நகர்

# மெட்ரோ ரயில் தடத்தில் 4 நாளில் 35,794 பேர் பயணம்

■ சென்னை

சென்னையில் புதிதாக மெட்ரோ ரயில் சேவை தொடங்கியுள்ள வண்ணாரப் பேட்டை - விம்கோ நகர் தடத்தில் 4 நாட்களில் மொத்தம் 35,794 பேர் பயணம் செய்து உள்ளனர்.

சென்னையில் வண்ணா ரப்பேட்டை - விம்கோ நகர் இடையே மெட்ரோ ரயில் சேவை, கடந்த 14-ம் தேதி தொடங்கப்பட்டது. தொடக்க விழாவையொட்டி முதல் நாளில் மக்கள் இலவசமாக பயணம் செய்ய அனுமதிக்கப் பட்டது. அதன்படி, வண்ணாரப் பேட்டை - விம்கோநகர் வழித் தடத்தில் மட்டும் 39,280 பேர் இலவசமாக பயணித்தனர். இதைத் தொடர்ந்து, கடந்த 15-ம் தேதி முதல் கட்டணம் வசூலிக்கப்பட்டது.

இதுகுறித்துமெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி ஒருவர் கூறும்போது, "வடசென்னை மக்கள் போக்குவரத்து நெரிசல் இன்றி, விரைவாக பயணிக்க மெட்ரோ ரயில் சேவை முக்கியமானதாக இருக்கிறது. புதியதாக சேவை தொடங்கியுள்ள வண் ணாரப்பேட்டை - விம்கோ நகர் தடத்தில் கடந்த 15, 16, 17, 18-ம் தேதிகளில் மொத்தம் 35,794 பேர் பயணம் செய்துள்ளனர். வரும் நாட்களில் பயணி களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என எதிர் பார்க்கிறோம்" என்றார்.